PR.NO: 722 நாள்: 05.11.2007

# பத்திரிகைச் செய்தி

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் இன்று (05.11.2007) காலை கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் திடீர்ஆய்வு மேற்கொண்டார்.

மருத்துவர்கள் சந்திப்பிற்கு பின்னர், மருத்துவமனை வளாகத்தை சுற்றி பார்வையிட்டு அசுத்தமான பகுதிகளை தூய்மையாக வைத்திருக்க வேண்டுமென்பதை வலிறுத்தினார். பின்னர் புறநோயாளிகள் பிரிவு, தீவிர சிகிச்சை பிரிவு, தீப்புண் சிகிச்சை அளிக்கும் பிரிவு, சர்க்கரை நோய்ப்பிரிவு, மகப்பேறு, குழந்தைகள் பிரிவுகள் ஆகியவற்றை பார்வையிட்டு நோயாளிகளிடம் நல்லமுறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறதா என்பதை கேட்டறிந்தார். சில உள்நோயாளிகள் பிரிவில் கழிவறைகள் சரியாக பராமரிக்கப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி, அவைகளை சுகாதாரத்துடன் பராமரிக்க தக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தினார்.

நோயாளிகளுக்கு உணவு தயார்செய்யும் சமையலறைக்கு சென்று சுகாதாரமானதாகவும், தரமானதாகவும் நிர்ணயிக்கப்பட்ட அளவில் தயாரிக்கப்படுகிறதா என்பதை பரிசோதித்து, நோயாளிகளுக்கு உணவு நல்லமுறையில் தயார்செய்து வழங்க தக்க ஆலோசனைகளை கூறினார்.

மருத்துவக் கல்விபயிலும் மாணவர்கள் தங்கியிருக்கும் விடுதியையும் பார்வையிட்டார்.

மகப்பேறு பகுதியில் பணியாளர்கள் என்ற பெயரில் வெளியாட்கள் நோயாளிகளின் உறவினரிடம் பணம் பெறுவதாக சிலர் முறையிட்டனர். இதனை தடுக்கும் நோக்கில் அனைத்து பணியாளர்களுக்கும் அடையாள அட்டை உடனடியாக வழங்குமாறும், நோயாளிகளை பார்க்க பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரத்தை வரையரை செய்யவும், ஒரு உள்நோயாளிக்கு ஒருபார்வையாளர் மட்டுமே அனுமதிக்க வேண்டும் என அறிவுறை வழங்கினார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9.